[1991 அக்டோபர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித்தேவர்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு தனக்கன் குளத்தில் 4.1 எக்கர் நிலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் எடுக்கப்பட்டது. இன்னும் அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா அல்லது அந்தத் தொழிலாளர்களுக்கு கடனையாவது கொடுத்து உடனடியாக அவர்கள் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் அது அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நூறாவது நாள் ஆட்சிக்காலத்தில் இதற்கு உறுதியான ஒரு பதிலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இவர்களுக்கு கடனாக வழங்கி, வீடுகள் கட்டித் தருவதற்கு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 125 திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

வழுக்குப்பாறை மணியாச்சி அணைத் திட்டம்.

* 810 திரு. வே. பெரியசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்தில் வழுக்குப்பாறை, மணியாச்சி அணைத் திட்டத்தினை 1991-92-ல் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

1991 அக்டோபர் 1]

(ஆ) ஆம் எனில், ஆரம்பப் பணிக்கு எவ்வளவு செலவு ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வழுக்குப்பாறை, மணியாச்சி அணைத் திட்டத்தினை எடுத்துக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழுக்குப்பாறை, மணியாச்சி திட்டம் காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்திலேயிருந்து அது நிலுவையிலேயிருந்து, பரிசீலித்துக் கொண்டிருப்பதாக சொல்லிக் கொண்டு வந்தார்கள். இப்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பகுதி ஒரு வறட்சியான பகுதி என்பதை நாடு அறியும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்தப் பகுதியிலே 7 ஏரிகள் வறண்டு போய், 4, 5 ஆண்டுகளாக மழையில்லாது பொய்த்துப் போய் இருக்கின்ற காரணத்தினால் குடிதண்ணீர் கூட இல்லாதபடி மக்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். காருண்ய உள்ளம் கொண்ட, எங்கள் கருணை உள்ளம் கொண்ட தாய் அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற நேரத்தில் தயவுசெய்து இதை நீங்கள் மறுபரிசீலனை செய்வீர்களா என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணியாச்சிப் பள்ளம் என்பது பாலாற்றினுடைய ஒரு கிளை நதியாகும். அந்த நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்கெனவே அவர்கள் ஆராய்கின்ற நேரத்திலே, ரிசர்வ் ஃபாரஸ்ட் ஏரியா என்கின்ற பகுதிகளிலே வருகின்ற காரணத்தினாலே, சந்தன மரங்களையும் தேக்கு மரங்களையும் அழிக்க வேண்டியிருக்கிறது. அதற்கான ஒப்புதலையும் மத்திய அரசிடமிருந்து பெறவேண்டி

யிருக்கிறது. இதுகுறித்து பல்வேறு கணக்குகளை அவர்கள் எடுத்து, அவைகளெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்ற காரணத்தினாலும், மேட்டுருக்கு வருகின்ற தண்ணீரை இடையிலே மறித்து, வருகின்ற அளவு குறைந்துவிடும் என்கின்ற காரணத்தினாலும் பல்வேறு நடைமுறைகள் ஆராய்ந்த பின் திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. அதைப்போல இந்த வழுக்குப்பாறையின் குறுக்கேயும் ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து 1990 ஆம் வருடம் மே மாதம் இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றிய விவரங்களை மறுபடியும் இந்த அரசு ஆராயும். இந்தத் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமாக இருக்குமேயானால், இந்தத் திட்டத்தை கவனத்திலே எடுத்துக் கொண்டு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் வானிலே ஒரு விடிவெள்ளியாகவும் சமுதாயப் பாலைவனத்திலே ஒரு நீரூற்றாகவும் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள், மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அங்கு மரங்கள் வெட்டப்படவேண்டிய அவசியம் இல்லை. காடுகளை அழிக்கக்கூடிய அவசியமும் வராது. நீண்ட வறட்சி நிறைந்த காடுகளாக இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே, பசுமைப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் தயவுசெய்து மீண்டும் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 269 எக்கர் வனத்துறைப் பகுதிகளிலே இருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்த வேண்டி இருக்கிறது. வனத்துறைப் பகுதிகளிலே இருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்துகின்ற

1991 அக்டோபர் 1]

நேரத்தில், மைய அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களையெல்லாம் நான் ஏற்கெனவே இந்த மன்றத்திற்குச் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இதுகுறித்து இந்த அரசு மிகுந்த கவனத்தோடு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 126. செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்புதல்.

* 1143 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்பி விவசாயத்திற்கு பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தத் திட்டத்திற்கான முதனிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அளவில் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-05)

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் முழு மதியைப் போல, இரண்டாண்டு காலமாக ஆட்சி செய்த இருள் வீணர்களை வீழ்த்தி, இங்கே தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்கி, அவையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் எங்களுடைய அன்புத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி